## மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்

## கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்) அவர்களின் செயல்முறை ஆணைகள்

**முன்னிலை : திருமதி V. ஷகிலா**

ந.க.எண். 68769/அ௫1/2/2017 –1 நாள். 31.05.2019

பொருள்: அலுவலக நடைமுறை – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி IV – போட்டித் தேர்வு 2015–2016 மருத்துவத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பணியில் இணைந்த தட்டச்சர்கள்– பணிவரன் முறை செய்தது ஓராண்டுக்காலம் எழுத்தர் பயிற்சி பெறுதல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை எண். 417 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள்: 01.12.1993
2. அரசாணை எண்.416 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள்: 21.02.2002
3. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் கடித ந.க.எண். 5683/ PSD- A2/2017 நாள்.03.10.17.
4. இவ்வியக்கக பணி நியமன ஆணை எண். 68769/அ௫1/2/2017 நாள்: 15.11.17

**ஆணை:**

பார்வை 3ல் காணும் கடிதம் வழி இவ்வியக்ககத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தட்டச்சர்களுக்கு பார்வை 4ல் காணும் இவ்வியக்கக ஆணைகளின்படி பணி நியமனம் மற்றும் பணியிட அமர்வு ஆணை வழங்கப்பட்டது. அதன்படி கீழ்காணும் தட்டச்சர்கள் அவர்கள் தங்கள் பெயருக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தேதியில் பணியில் இணைந்துள்ளனர். மேற்குறிப்பிட்டுள்ள தட்டச்சர்கள் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணிகள் பொது விதி 10(a) (i)ன்படி பணிநியமனம் பெற்று முறையே இவ்வலுவலகப் பணியில் தட்டச்சர்களாக பணியில் இணைந்துள்ளனர்.

எனவே கீழ்காணும் பட்டியலில் கலம் 4ல் குறித்துள்ள நாள் முதல் அவர்களின் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது. அவர்களின் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியாக மூன்று ஆண்டு பணிக்காலத்திற்குள் இரண்டு ஆண்டு பணிக்காலம் முடிக்கும் வகையில் அவர்கள் தகுதி காண் பருவ காலத்தில் வைக்கப்படுகிகிறார்கள்.

கீழ்காணும் தட்டச்சர்கள் தகுதி காண் பருவ காலத்தில் கணிணியில் அலுவலக இயக்குமுறை (Computer on Office Automation) மற்றும் மருத்துவ விதி தொகுப்பு (Medical Code) தேர்வில் தேர்ச்சி பெற்றால் தான் தகுதி காண் பருவம் பூர்த்தி செய்த ஆணை வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் (1) | பெயர் (2) | அரசுப் பணியில் இணைந்த நாள் (3) | பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் (4) |
|---|---|---|---|
| 1 | திரு. K. சங்கர் | 27.11.2017 முப | 27.11.2017 முப |
| 2 | செல்வி. T.கவிப்பிரியா | 27.11.2017 முப | 27.11.2017 முப |
| 3 | திரு. B. சாமுவேல் ரஞ்சித் | 29.11.2017 முப | 29.11.2017 முப |

மேற்படி குறிப்பிட்டுள்ள தட்டச்சர்களின் தற்காலிகப் பணி அவர்கள் தட்டச்சர்களாக அரசுப்பணியில் இணைந்துள்ள நாள் முதல் (மேலே அவர்கள் பெயருக்கு எதிரே குறிப்பிட்டுள்ள தேதி முதல்) 2015 – 2016 வரையிலான காலத்திற்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தினால் நடத்தப்பட்ட தொகுதி – 4 தேர்வு நியமனத்திற்கு எதிராக தொடுக்ககபட்ட சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரைக் கிளையில் நிலுவையில் உள்ள நீதி பேராணையின் மீது நீதிமன்றத்தின் இறுதி தீர்ப்பின் முடிவிற்கு உட்பட்டு, பணிவரன்முறை செய்யப்படுகிறது.

மேற்கண்ட பணிவரன்முறை ஆணை, சம்மந்தப்பட்ட தட்டச்சர்களின் பணிபதிவேட்டில் பதியப்படுகிறது.

**V. ஷகிலா**
**கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்)**

பெறுநர்
சம்பந்தப்பட்ட பணியாளர்கள்,
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், சென்னை – 6
நகல்
நிர்வாகப் பிரிவு 2 / பணப்பிரிவு (2 நகல்கள்) / பணிப்பதிவேடு
இருப்புக்கோப்பு / உதிரி

// உண்மை நகல் / அனுப்பப்படுகிறது //

**துணை இயக்குநர் (நிர்வாகம்)** 10/6/17

10/06/17